# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 09 வெள்ளிக்கிழமை 23.05.2025 கதிர் 203



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel




# ஜனாதிபதி ஜூன் 10 ஆம் திகதி ஜேர்மனிக்கு விஜயம்



கொழும்பு, மே 23

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் ஜூன் 10ஆம் திகதி ஜேர்மனிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்று வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

“எமது சுற்றுலாத் துறை வீழ்ச்சியடைவதற்கு முன்பு, ஜேர்மன் உள்ளிட்ட ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டுக்கு வந்தனர். ஆனால், இப்போது அது குறைந்துள்ளது.

ஜேர்மன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அதிகளவில் ஈர்ப்பதற்கும், இரு நாடுகளும் இதற்கு என்ன செய்ய முடியும் என்பதையும் பார்க்க வேண்டும்.

பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமல்லாமல், உயர்மட்ட சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதையும் இலக்காகக் கொள்ள வேண்டும்,” - என்றார்.

# ரி - 56 ரக துப்பாக்கி மீட்கப்பட்ட விவகாரம்: முன்னாள் அமைச்சர் துமிந்த இன்று கைது!



கொழும்பு, மே 23

கொழும்பில் தங்க முலாம் பூசப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி கைப்பற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளருமான துமிந்த திஸாநாயக்க இன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திம்பிரிகஸ்யாயவில் உள்ள சொகுசு தொடர்மாடி குடியிருப்பில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

7 ➤

# கொழும்பு மாநகரத்தில் என்.பி.பி. ஆட்சி உறுதி

## அமைச்சர் லால் காந்த திட்டவட்டம்



கொழும்பு, மே 23

“கொழும்பு மாநகர சபையில் நாம் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டோம். இது தொடர்பில் அதிகாரபூர்வ அறிவிப்பை மாத்திரமே வெளியிட வேண்டியுள்ளது.”

- இவ்வாறு அமைச்சர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையில் எதிரணியே ஆட்சியமைக்கும் எனக் கூறப்பட்டு வரும் நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மைப் பலத்தை உறுதிப்படுத்திவிட்டோம். அதிகாரபூர்வமற்ற வகையில் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. அதனை அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டிய வேலை மட்டும்தான் உள்ளது. எமது மேயரும் பதவியேற்றத் தயாராகவுள்ளார்.” - என்றார்.

# பல்வேறு விடயங்கள் தொடர்பில் பிரதமர் – அமெரிக்கத் தூதர் பேச்சு



கொழும்பு, மே 23

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இலங்கைக் கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கு

அமெரிக்க வெளிநாட்டு உதவிகளை வழங்குவதற்கான வழிமுறைகள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான நிலைபேறான ஒத்துழைப்புக்கு பங்களிக்கும் வழிகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அமெரிக்க திறைசேரித் திணைக்களத்தின்

7 ➤



# அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் கைது!

அம்பாறை, மே 23

மட்டக்களப்பு மங்களாராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் இன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை, உஹன பொலிஸ் நிலையத்தில் குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்ட சம்பவத்தையடுத்து இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உஹன பொலிஸாரால் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டபோது, அவருடன் இருந்த இரண்டு பிள்ளை களைப் பாதுகாப்பற்ற முறையில் ஓட்டோவில் அழைத்துச் செல்ல

7 ➤

# தயாசிறி ஜயசேகரவின் நடத்தை தொடர்பில் ஆராய விசேட குழு!



கொழும்பு, மே .23

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, சபாநாயகர் விக்ரமரத்னவினால் மூவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நாடாளுமன்ற அமர்வு ஆரம்பிக்கப்படும் போது சபாநாயகர் இதனை அறிவித்தார். கடந்த மே 20ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வு நடைபெற்றபோது, சட்டத்தரணி தயாசிறி ஜயசேகரவின் நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை கவனத்தில் கொண்டு இந்த மூவர் அடங்கிய குழு நியமிக கப்பட்டதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அதன்படி குறித்த விசாரணை குழுவின் தலைவராக நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமாலி வீரசேகர நியமிக்கப்பட்டுள்ளதுடன், குழுவின் ஏனைய உறுப்பினர்களாக, வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாதியர் சேவையில் இணைக்கப்பட்டோருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நாளை!

*கொழும்பு, மே .23*

*தாதியர் சேவையில் இணைக்கப்பட்ட 3,147 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் அலரி மாளிகையின் கூட்ட மண்டபத்தில் நாளை (24) நடைபெறுவுள்ளது.*

*நாட்டின் தாதியர் சேவை வரலாற்றில் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான நியமனக் கடிதங்கள் வழங்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.*

*அத்துடன் இந்த நிகழ்வின் போது, தாதியர் சேவையில் 79 விசேட தர அதிகாரிகளுக்கான பதவி உயர்வுகளும் வழங்கப்பட உள்ளது.*

*பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ பங்கேற்கும் விழாவில், சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர், நிபுணர் டாக்டர் அனில் ஜாசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழு கலந்து கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# கண்டியில் பல அமைப்புக்கள் இணைந்து போராட்டம்!

கல்வி சார் இடங்களில் இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகங்கள், பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதை போன்றவற்றுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தி கண்டியில் பல அமைப்புக்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் கண்டி ஜோர்ஜ் சில்வா பூங்காவுக்கு முன்பாக இடம்பெற்றிருந்தது. இந்த போராட்டத்தை சட்ட ஆதிக்கத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம், கண்டி சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், சமூக செயற்பாட்டு ஒன்றியம், கண்டி பிரஜைகள் அமைப்பு, கண்டி புனருதய அமைப்பு, இலங்கை ஆசிரியர் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. போராட்டத்தின் போது கொழும்பு கொட்டாஞ்சேனை மாணவி, சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் போன்றவர்களின் உயிர்மாய்ப்புக்கு காரணமான விடயங்களை தடுப்பதில் அதிகாரிகள் பின் நின்றமை மற்றும் அதற்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும் போன்ற விடயங்களை சுட்டிக்காட்டி பதாதைகள் ஏந்தியாவாறு கோஷங்கள் எழுப்பினர்.

# கொழும்பு வாழ் மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவித்தல்!

கொழும்பு, மே .23

கொழும்பின் சில பகுதிகளுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி 12 மணி நேரம் நீர் விநியோகம் தடை செய்யப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

அம்பதலே நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக நீர் விநியோகம் தடை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கொழும்பு நகரம் உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் மக்களுக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்க்க, தேவையான நீரை முன் கூட்டியே சேமித்து வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீர் விநியோகம் தடை செய்யப்படும் பகுதிகள் பின்வருமாறு:

கொழும்பு 1 முதல் 15 வரை
கோட்டை
கடுவலை
பத்தரமுல்லை
கொலன்னாவை
கோட்டிகாவத்தை
முல்லேரியாவை
ஐனுஉ
மஹரகம
தெஹிவளை
கல்கிஸ்ஸை
இரத்மலானை
மொரட்டுவை



# ஆனையிறவு உப்பளம் ஊழியர்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

ஆனையிறவு உப்பளத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டி வியாழக்கிழமை (22) ஒன்பதாவது நாளாக போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு, வியாழக்கிழமை (22) மாலை சென்று முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர்.

-மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில்,குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பணியாளர்கள் நான்கு பேர் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைத்துச்செல்லப்பட்டு பல்வேறு பிரச்சனைகளை முன் வைத்து முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.





ஆனையிறவு உப்பளத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டி கடந்த புதன்கிழமை (14) முதல் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த உப்பளத்தின் தற்போது உள்ள பொது முகாமையாளர், முகாமைத்துவ பிரிவினர், உதவி முகாமையாளர், மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட பலர் தம்மை பழிவாங்குவது போன்றே செயற்படுகின்றனர்.

எமக்கு உரிய வகையில் வேலைகளை வழங்குவதில்லை. எமக்கான மருத்துவ வசதிகள் உப்பளத்தில் இல்லை. குடிநீர் பிரச்சனை காணப்படுகிறது. குடிநீர் வெளியே உள்ள தாங்கியில் இருந்து தான் உள்ளே எடுத்து செல்லவேண்டும்.

இந்த மாதம் தொடங்கி இதுவரை எமக்கு 4 நாட்களே வேலை வழங்கப்பட்டது. 10 நாட்கள் வேலை இல்லாமலே இருக்கின்றோம். இதை விட இந்த மாதம் வேலை செய்யாத ஊழியர்கள் கூட காணப்படுகின்றனர்.

மனித வலு இருக்கும் போது இயந்திர வலுவை பயன்படுத்துகின்றனர். வேலை செய்யும் எமக்கு சீருடைகள், பாதுகாப்பு கவசங்களோ வழங்கப்படுவதில்லை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கும் வகையில் இன்றைய தினம் வியாழக்கிழமை (22) மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் சார்பாக நான்கு பேரை யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைத்துச் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஆனையிறவு உப்பளம் ஊழியர்கள் சார்பாக துரித விசாரணைகளை மேற்கொள்வதாக யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு குறித்த ஊழியர்களிடம் தெரிவித்துள்ளது. (ஐ)



## 72ஆவது 'உலக அழகி போட்டி– இறுதிச் சுற்றில் இலங்கை பெண்மணி தகுதி!

கொழும்பு, மே .23

இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் நடைபெற்று வரும் 72ஆவது 'உலக அழகி போட்டியில்'உநயன-வழ-உநயன ஊாயடடநபெந பிரிவில் 107 அழகிகளில் இருந்து, இறுதி 20 பேருக்குள் இலங்கையை சேர்ந்த அனுதி குணசேகர தகுதி பெற்றுள்ளார்.

அனுதி குணசேகர இந்த சுற்றில் ஆசிய மற்றும் ஓசியானியா பிராந்தியத்தில் முதல் 5 பேருக்குள் தேர்வாகியுள்ளார்.

இவருடன் இந்த சுற்றில் ஆசிய மற்றும் ஓசியானியா பிராந்தியத்தில் இருந்து தாய்லாந்து, துருக்கி, லெபனான் மற்றும் ஜப்பான் போட்டியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

உலக அழகி போட்டியில் அனுதி குணசேகர அவர்களுடைய இந்த முன்னேற்றமானது இலங்கைக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக பார்க்கப்படுகின்றது.

74 ஆண்டு கால உலக அழகி போட்டி வரலாற்றில்உநயன-வழ-உநயன ஊாயடடநபெந பிரிவில் இறுதி சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இலங்கை போட்டியாளராக அனுதி இடம்பிடித்துள்ளார்.

அனுதியின் மற்றொரு தனித்துவமான வெற்றியாக, இந்த முறை உலக அழகி போட்டியில் இதுவரை நடைபெற்ற இரண்டு போட்டி பிரிவுகளிலும் இறுதி சுற்றுக்கு வந்த ஆசியாவின் ஒரே போட்டியாளராகவும் இவர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அனுதி பங்கேற்கும் **Head-to-Head Challenge** பிரிவின் இறுதி 20 பேர் பங்கேற்கும் இறுதிப்போட்டி இன்று(23) நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

## தலைமறைவாக உள்ள குற்றவாளிகளை கைது செய்ய இலங்கை அரசு நடவடிக்கை!

கொழும்பு, மே .23

வெளிநாடுகளில் தலைமறைவாக உள்ள 20 ஆபத்தான குற்றக் கும்பல் உறுப்பினர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும், சந்தேக நபர்களை கைது செய்ய ஏற்கனவே சிவப்பு அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

சர்வதேசபொலிஸாருடன்இணைந்துஇந்தநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சந்தேக நபர்கள் வசிக்கும் நாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களை நாடு கடத்துவதற்கு வசதியாக இராஜதந்திர முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர் இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கையில், விசாரணைகளை விரிவுபடுத்த வெளியுறவு அமைச்சகத்துடன்நெருக்கமாகப்பணியாற்றிவருகிறோம்.

இதுவரை, குற்றவியல் வலையமைப்பைச் சேர்ந்த 11 பேர் வெற்றிகரமாக இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டு உள்ளூர் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் கொலை, போதைப்பொருள் கடத்தல் மற்றும் பிற கடுமையான குற்றங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கின்றனர்.

குற்றப் புலனாய்வுத் துறை (ஊஐனு) மற்றும் பொலிஸ் சிறப்புப் பணிக்குழு ஆகியவை இணைந்து வெளிநாட்டைச் சேர்ந்த மற்றும் உள்நாட்டில் செயல்படும் கும்பல் உறுப்பினர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள்மற்றும்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன என்று அமைச்சர் ஆனந்த விஜேபால சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## பிரதமர்-ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர் இடையே சந்திப்பு



கொழும்பு, மே .23

பிரதமர் ஹரிணி அமரசூரிய, இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்சை இன்று பாராளுமன்றத்தில் சந்தித்து, இலங்கை அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கும் இடையிலான வலுவான மற்றும் நீடித்த கூட்டாண்மையை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இந்த சந்திப்பின் போது, இலங்கையின் வளர்ச்சி முன்னுரிமைகளை, குறிப்பாக சமூகப் பாதுகாப்பு, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் தேசிய நல்லிணக்கம் போன்ற துறைகளில் ஆதரிப்பதற்கான ஐ.நா.வின் உறுதியான உறுதிப்பாட்டை ஃபிரான்ச் மீண்டும் வலியுறுத்தினார். ஜூன் 2025 இல் திட்டமிடப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரின் எதிர்வரும் உத்தியோகபூர்வ பயணம் குறித்தும் அவர் பிரதமரிடம் விளக்கினார்.


நாடு முழுவதும் உள்ள அனைத்து சமூகங்களின் உண்மையான தேவைகள் மற்றும் அபிலாஷைகளை அர்த்தமுள்ள வகையில்நிவர்த்திசெய்யும்ஒரு நல்லிணக்க செயல்முறையை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை பிரதமர் அமரசூரிய வலியுறுத்தினார்.

காசாவில் மோசமடைந்து வரும் மனிதாபிமான நிலைமை குறித்து அவர் மேலும் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தினார், மேலும் பலஸ்தீன மக்களுடன் சர்வதேச ஈடுபாடு மற்றும் ஒற்றுமையை அதிகரிக்க அழைப்பு விடுத்தார்.

இந்தக் கூட்டத்தில் அமைதி மற்றும் மேம்பாட்டு ஆலோசகர் திருமதி நெத்மினி மெடவல மற்றும் கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தின் தலைவர் திரு. ஆண்ட்ரியாஸ் கர்பதி ஆகியோர் கலந்து கொண்டனர். இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி பிரதமரின் மேலதிக செயலாளர் திருமதி சாகரிகா போகவத் மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் நாயகம் திருமதி தயானி மெண்டிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை மக்களுக்கான பரஸ்பர முன்னுரிமைகளை முன்னேற்றுவதற்கான தங்கள் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை இரு தரப்பினரும் மீண்டும் உறுதிப்படுத்தியதையடுத்து சந்திப்பு நிறைவடைந்தது.

# உலகில் பன்முகத்தன்மை கொண்ட நாடு இந்தியா: முதலீட்டாளர்கள் மாநாட்டில் மோடி பெருமிதம்!



’உலகில் மிகவும் பன்முகத்தன்மை கொண்ட நாடு இந்தியா. வட கிழக்கு மாநிலங்களில் வளர்ச்சியை உருவாக்க வேண்டும்” என பிரதமர் மோடி பேசுகையில் தெரிவித்தார். டில்லி பாரத் மண்டபத்தில் நடந்த வடகிழக்கு மாநில முதலீட்டாளர்கள் மாநாட்டில், பிரதமர் மோடி பேசியதாவது: அதிகமான தொழிலதிபர்கள் இங்கு வந்துள்ளீர்கள். இது உங்களது வட கிழக்கு மாநிலங்கள் மீதான அக்கறையை எடுத்துரைக்கிறது. வட கிழக்கு மாநிலங்கள் எழுச்சி பெற்று வருகிறது. முன்னெப்போதும் இல்லாத வளர்ச்சியை கண்டு வருகிறது. மேலும் வளர்ச்சியை உருவாக்க நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய, வடகிழக்கு மாநிலங்களில் வளர்ச்சியை கொண்டு வருவது முக்கியம். எங்களுக்கு, கிழக்கு என்பது ஒரு திசை மட்டுமல்ல. எங்களுக்கு அதிகாரத்தை அளித்துள்ளது. இந்தியா உலகின் மிகவும் பன்முகத்தன்மை கொண்ட நாடு. வர்த்தகம், பாரம்பரியம், ஜவுளி மற்றும் சுற்றுலா வரை, வடகிழக்கின் பன்முகத்தன்மை அதன் மிகப்பெரிய பலமாகும்.

அமைச்சர்கள் 700 க்கும் மேற்பட்ட முறை வடகிழக்கு மாநிலங்களுக்கு பயணம் செய்து ஆய்வு செய்துள்ளனர். கடந்த 11 ஆண்டுகளில் வடகிழக்கு மாநிலங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி அதிகம். வட கிழக்கு மாநிலங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது.

கடந்த 11 ஆண்டுகளில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நக்சலைட்டுகள் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு அமைதிப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இவ்வாறு அவர் பேசினார. (ஐ)




## தெலுங்கானா கவர்னர் மாளிகையில் திருட்டு: ஹெல்மெட் அணிந்து ஊழியர் கைவரிசை

ஐதராபாத் தெலுங்கானா கவர்னர் மாளிகையில் ஆவணங்கள் மற்றும் ஹார்ட் டிஸ்க் திருடு போன சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஹைதராபாத்தில் தெலுங்கானா கவர்னர் மாளிகை உள்ளது. இங்கு சுதர்ம பவன் என்ற வளாகம் இருக்கிறது. மே 14ம் தேதி இந்த வளாகத்தில் ஆவணங்கள் சிதறிக் கிடந்ததை கண்டு அதிகாரிகள் சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர்.

அப்போது, ஹெல்மெட் அணிந்து வந்த மர்ம நபர் ஒருவர், உள்ளே நுழைந்து ஆவணங்கள், சில ஹார்ட் டிஸ்குகளை எடுத்துச் செல்வது தெரிந்தது. இதையடுத்து, கவர்னர் மாளிகை அதிகாரிகள் தரப்பில் போலீசில் புகார் அளிக்கப்பட்டது.

தீவிர விசாரணை நடத்திய போலீசார், கணினி என்ஜினியர் சீனிவாஸ் என்பவரை கைது செய்துள்ளனர். இது குறித்து போலீசார் கூறியதாவது்

கைது செய்யப்பட்ட சீனிவாஸ் என்பவர் கவர்னர் மாளிகை ஊழியர். பணியில் இருந்த தற்காலிக பெண் பணியாளரை செல்போனில் போட்டோ எடுத்து, அதை மார்பிங் செய்து சம்பந்தப்பட்ட பெண்ணுக்கே அனுப்பி மிரட்டி உள்ளார்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட பெண் அளித்த புகாரின் பேரில், மே 12ம் தேதி சீனிவாசை கைது செய்து பின்னர் ஜாமினில் விடுவித்தோம். இந்த சம்பவத்தை தொடர்ந்து அவரை கவர்னர் மாளிகை அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்தனர்.

பின்னர்,கவர்னர் மாளிகையில் தமது அலுவலக பயன்பாட்டுக்காக கொடுக்கப்பட்ட கணினியில் தாம் எடுத்த போட்டோக்களை பதிவேற்றி இருந்திருக்கிறார். அவற்றை எடுத்துச் சென்று அழிக்கவே கவர்னர் மாளிகையில் நுழைந்து ஹார்ட் டிஸ்கை திருடிச் சென்றுள்ளார்.

தற்போது அவர் மீது மற்றொரு வழக்கு பதியப்பட்டு கைது செய்யப்பட்டு உள்ளார். பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். (ஐ)

## கோவையில் இருந்து கேரளாவுக்கு கடத்தல்: தங்கம், ரூ.70 லட்சத்துடன் மூவர் கைது



கோவையில் இருந்து கேரளாவுக்கு பிரத்யேக உடையணிந்து பைக்கில், ரூ.70 லட்சம் ரொக்கம், 200 கிராம் தங்கம் கடத்திய 3 பேரை பொலிஸாரகைது செய்தனர்.

கோவையில் இருந்து கேரளாவுக்கு உரிய ஆவணங்கள் ஏதுமின்றி தங்கம், பணம் கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் வந்தது. கோவை வழியாக கேரளாவிற்கு பிரத்யேக உடையணிந்து பைக்கில் சென்ற 3 பேரை வழிமறித்து பொலிஸார் சோதனை செய்தனர்.

அவர்கள் உரிய ஆவணங்கள் இல்லாமல் பைக்கில் ரூ.70 லட்சம் ரொக்கம், 200 கிராம் தங்கம் கடத்தி செல்வதை பொலிஸார் கண்டுபிடித்தனர். பின்னர் அந்த தங்கம் மற்றும் பணத்தை பறிமுதல் செய்த போலீசார், 3 பேரை கைது செய்து விசாரிக்கின்றனர்.

சாகர், மணிகண்டன், சந்திப் என்பது பொலிஸார் விசாரணையில் தெரியவந்தது. இவர்கள் யாருக்காக தங்கம் கடத்தி வந்தனர். அவர்களது பின்னணியில் இருக்கும் நெட்வொர்க் யார் என்பது பற்றி சுங்கத்துறையினர் விசாரிக்கின்றனர். (ஐ)

## அமலாக்கத்துறை ரெய்டு வந்தால் ஓடிப்போய் பிரதமரை சந்திக்கிறீர்கள் சீமான் கிண்டல்



“அமலாக்கத்துறை ரெய்டு வந்தால் ஓடிப்போய் பிரதமர் மோடியை சந்திக்கிறீர்கள்” என முதல்வர் ஸ்டாலினை நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் விமர்சனம் செய்துள்ளார்.

திருச்சியில் நிருபர்கள் சந்திப்பில் சீமான் கூறியதாவது: தி.மு.க.,வுக்கு எது எதிர்க்கட்சி. அ.தி.மு.க., எதிர்க்கட்சியா? தி.மு.க., ஒரு கொள்கை வைத்து இருக்கிறது. ஊழல், லஞ்சம், கொள்ளை, மணல் கொள்ளை நடக்கிறது. பா.ஜ., மற்றும் காங்கிரஸ் இடையே என்ன கொள்கை வேறுபாடு இருக்கிறது? கொடிகள் வேறு வேறு ஆக இருக்கிறது. கொள்கையில் வேறுபாடு இருக்கிறதா?

இவர்களும் ஓட்டுக்கு காசு கொடுப்பார்கள். அவர்களும் ஓட்டுக்கு காசு கொடுப்பார்கள். இவர்களும் இலவசம் அறிவிப்பார்கள். அவர்களும் இலவசம் அறிவிப்பார்கள். 3 ஆண்டுகளாக நடந்த நிடி ஆயோக் கூட்டத்திற்கு செல்லாத முதல்வர் இப்போது செல்வது ஏன்?

அமலாக்கத்துறை ரெய்டு வந்தால் ஓடிப்போய் பிரதமர் மோடியை சந்திக்கிறீர்கள். இதற்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. இந்த நாட்டை நிர்வாகம் செய்வது, சட்டசபை, பார்லிமென்டா? அல்லது நீதிமன்றமா ? என்ற கேள்வி எழுகிறது. எல்லா முடிவுகளையும் நீதிமன்றம் எடுத்தால், சட்டசபை, பார்லிமென்ட் தேவையில்லை. அதனை கலைத்து விடலாம். இவ்வாறு சீமான் கூறினார். (ஐ)




# பெண் எனும் பெருந்தீ!

**பெண் என்றாலே மெல்லியளாள் என்று பொதுப்பார்வை இருக்கிறது. ஆனால், ஆணைவிட வலுவானவள் என்ற விஷயத்தை யுகங்களாக மறைத்ததில் தான் ஆண்களின் சாமர்த்தியம் வெளிப்படுகிறது. மனதையும் எண்ணங்களையும் வலுவிழக்கச் செய்தாலே போதும். இயல்பாகவே உடலும் வலுவிழக்கும் என்ற உளவியல் ரீதியான தாக்குதலைத்தான் ஆண்கள் தொடுத்திருக்கிறார்கள்.**

மனித குலத்தின் வரலாறு பெண்களிடமிருந்தே தொடங்கியது என்பது தான் முற்றிலும் உண்மை. ஆதி மனித இனத்தின் தலைமையாகப் பெண்தான் இருந்து வழிநடத்தினாள். தனக்குரிய ஆணைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையும் அவளிடமிருந்தது. காலங்கள் மாற மாற 'விழித்துக்' கொண்ட ஆண்களால் தான் அவளது தலைமைப் பொறுப்பு தட்டிப் பறிக்கப்பட்டது.

ஆளுமைத்திறன் என்பது ஒரு சிக்கலான பிரச்னையில் மனம் தடுமாறாது அதைத்தீர்க்க முயற்சிப்பதும், கைமீறிப் போய்விட்ட விஷயங்களைத் தடுமாறாமல் கையாளுவதும் தான். இந்த விஷயத்தில் ஆண்களை விடப் பெண்கள் தான் அதிகம் திறமை வாய்ந்தவர்கள். இந்த ஆளுமைத்திறன் ஆண்களுக்கு பெரும் சவாலாக இருந்ததில் மெதுவாக பெண்களின் தலைமைப் பொறுப்பைக் கையகப்படுத்திக்கொண்டு அவர்களுக்கு நிர்வகிக்கும் திறன் இல்லை, ஆட்சி செய்யும் திறமை இல்லை என்றெல்லாம் தொடர்ந்து அவர்களின் மூளை வழியாக மரபணுக்களில் புகுத்திவிட்டார்கள். பெண்களும் இதை நம்பத் தொடங்கிவிட்டார்கள் என்பதுதான் பெரும் சோகம்.



படிப்புக்கும் ஆளுமைத்திறனுக்கும் சம்பந்தம் இல்லை. அது அவரவர் வளர்ந்த விதத்திலும், எதிர்கொண்ட பிரச்னைகளிலும் தான் மேம்படுகிறது. இந்த ஆளுமை உணர்வு தான் சாதாரண மனிதர்களிலிருந்து தலைவர்களைத் தனித்துக் காட்டுகிறது. மற்றவர்களைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல ஆளுமை. தன்னைத்தானே முதலில் கட்டுப்படுத்துபவர்களே மற்றவர்களையும் எளிதாகக் கட்டுப்படுத்துகின்றனர். அந்த வகையில் பெண்கள் தன் ஆசைகளையும் விருப்பங்களையும் ஒடுக்குவதில் வல்லவர்கள். ஆனால், ஆண்கள் எளிதில் சலனப்படும் இயல்புடையவர்கள். ஆண்கள் மாங்குமாங்கென்று வேலை செய்தாலும், பெண்தான் அவற்றை ஒழுங்குபடுத்தி நிர்வகித்தாள்.

ஆதியில் ஆண்கள்தான் வேட்டைக்குப் போய் உணவு கொண்டுவந்தார்கள் என்றும், பெண்கள் வீட்டில் இருந்து பயிரிட்டு விவசாயம் கண்டறிந்தார்கள் என்றும் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வந்ததைச் சற்றே மாற்றிப் போட்டிருக்கிறது கடந்த வருடத்தின் கண்டுபிடிப்பு.

2020ஆம் வருடம் நவம்பர் மாதம் 4ஆம் தேதி தென் அமெரிக்காவில் உள்ள ஆண்டிஸ் மலையில் ஒன்பதாயிரம் வருடங்களுக்கு முந்தைய ஒரு சடலம் கண்டறியப்பட்டது. சோதனைக்கு உட்படுத்தியதில் அது ஒரு பெண்ணின் உடல் என்றும், வேட்டை அவளது தொழில் என்றும் அறிய முடிந்தது. இதன் மூலம் ஆண்கள் மட்டுமே வெளியே சென்று வேட்டையாடினார்கள். பெண்கள் வீட்டோடு இருந்து உணவு சேகரித்தார்கள் என்ற கருத்து மாறியது. இந்த ஆய்வினை டாவீசில் (ருளுயு) உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் செய்திருக்கின்றனர். இது தொடர்பான ஆய்வுக் கட்டுரை, குநஅயடந உரவெநசள ழக வாந நுயசடல யுஅநசஉையள என்ற தலைப்பில் ழேஎ. 4 தேதியிட்ட ளைஉநைஉந யனஎயஉநள ஆய்விதழில் வெளியாகியிருக்கிறது.

பெண் என்றாலே மெல்லியளாள் என்று பொதுப்பார்வை இருக்கிறது. ஆனால், ஆணைவிட வலுவானவள் என்ற விஷயத்தை யுகங்களாக மறைத்ததில் தான் ஆண்களின் சாமர்த்தியம் வெளிப்படுகிறது. மனதையும் எண்ணங்களையும் வலுவிழக்கச் செய்தாலே போதும். இயல்பாகவே உடலும் வலுவிழக்கும் என்ற உளவியல் ரீதியான தாக்குதலைத்தான் ஆண்கள் தொடுத்திருக்கிறார்கள்.

சங்ககாலப் பெண்கள் படிப்பறிவுடன் திகழ்ந்தார்கள். ஔவையார், வெண்ணிக் குயத்தியார், வெள்ளிவீதியார், இளவெயினி, பாரிமகளிர், காக்கைப்பாடினி, நச்செள்ளை இன்னும் எத்தனையோ மகளிர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். இலக்கியங்களில் சிறந்திருந்தனர். பெண்களின் பெருமை ஓங்கியிருந்தது. என்றாலும் பிற்காலத்தில் வந்த ஆண்கள், பெண்களை முடக்க முதலில் கையிலெடுத்தது அவர்களது கல்வி பயிலும் உரிமையைப் பறித்ததுதான்.

பழந்தமிழகத்தில்கூட அரசாட்சியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெண்களின் பங்களிப்பு இருந்திருக்கிறது. சோழ இளவரசி குந்தவை, நூர்ஜஹான், ஜஹானாரா என்று நிறைய உதாரணங்கள் இருக்கின்றனர்.



இன்னும் எத்தனையோ குடும்பங்களில் பெண்தான் முடிவெடுப்பவளாகத் திகழ்கிறாள். அவள் தொலைநோக்குப் பார்வையுடன் தான் சிந்திக்கிறாள். பெண்ணைக் கலந்து எடுக்காத எந்த முடிவும் வெற்றி பெறுவதில்லை. ஆனால், இதை ஏற்றுக்கொள்ள ஆண்களுக்கு வறட்டு கௌரவம் தடுக்கிறது.

ஆணைக் கையாளும் பக்குவமும் பெண்ணுக்கு நிறைய உண்டு. தன்னைவிட 'இளைய' வயதுப் பெண்ணை ஓர் ஆண் மணமுடிக்க என்னென்னவோ காரணங்கள் சொல்லலாம். ஆனால், வயது அதிகமான ஆணைக் குறைந்த வயதுப் பெண் சுலபமாக 'ஹேண்டில்' செய்வாள் என்பதுதான் உண்மை.

பெண்ணின் ஆளுமைத்திறனுக்குச் சரியான எடுத்துக்காட்டாக அவளது 'மல்ட்டி டாஸ்கிங்' வேலைகளைச் செய்வதைச் சொல்லலாம். அவள் சமைத்துக் கொண்டே வாஷிங்மெஷினில் துணிகளைப் போட்டு விட்டு, குழந்தைக்கு பால்புட்டியைக் கொடுத்து, வயதானவர்கள் இருந்தால் காபி போட்டுக் கொடுத்துவிட்டு, வரும் தொலைபேசி அழைப்பையும் கவனித்துக் கொள்ள முடியும். ஆனால், ஆணால் ஒரு நேரத்தில் ஒரு வேலைதான் செய்ய முடியும். சமையல்கூட நிறைய ஆண்கள் ஒவ்வொன்றாகத் தான் சமைப்பார்கள். ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வகை சமைக்க முடியாமல் திணறுவார்கள். அவ்வளவு ஏன் பெண்ணால் வீட்டுவேலை, அலுவலக வேலை இரண்டையும் அசால்ட்டாகச் சமாளிக்க முடியும். ஆணால் நிச்சயமாக முடியாது.

இயற்கையாகவே ஆண்களின் மூளையைவிடப் பெண்களின் மூளை 8 சதவீதம் சிறியதாக இருந்தாலும் அவர்களின் மூளைக்கு அதிக திறன் உள்ளதாக ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆளுமை என்பது மூளையின் அளவில் இல்லை, செயலில் தான் இருக்கிறது என்பது புரிகிறது. படித்தவர்களைவிடப் படிப்பறிவு இல்லாத, அனுபவ அறிவு மிகுந்த கிராமப்புற மகளிர் எத்தனையோ இக்கட்டான சூழ்நிலைகளையும் லகுவாகச் சமாளித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடலோர மீனவக் குடும்பங்களில் ஆண்கள் மீன்பிடித்து வருவதோடு அவர்களது வேலை முடிந்துவிடும். அந்த மீன்களைச் சுத்தப்படுத்தி, வியாபாரம் செய்து, மீதமான மீன்களைக் கருவாடாக்கி, காசு பார்ப்பது எல்லாம் பெண்கள் வேலைதான். சிக்கல்களை எதிர்கொள்ளும் திறன் கொண்டவர்கள் தான் அவற்றைச் சமாளித்துக் கடக்கிறார்கள்.

## காசா மீது கொஞ்சம் கருணை காட்டுங்கள் இஸ்ரேலிடம் வலியுறுத்தும் உலக சுகாதார நிறுவனம்




காசா மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், போரை நிறுத்துமாறு உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம், இஸ்ரேலை வலியுறுத்தியுள்ளார்.

பாலஸ்தீனத்தின் காசாவை ஆளும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினர், கடந்த 2023ம் ஆண்டு இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியது. இதில் 1,139 இஸ்ரேல் மக்கள் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்திற்கு பதிலடியாக காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இரு ஆண்டுகளை நெருங்கி நடந்து வரும் இந்தப் போரில், காசாவில் 53,475 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மோதலை நிறுத்தும்படி இரு தரப்பையும் உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்ட நிலையில், பிணைக்கைதிகளை விடுவிப்பதில் ஹமாஸ் தாமதம் காட்டியதால், இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், காசாவில் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருவதாகவும், காசா மீது கொஞ்சம் கருணை காட்டும்படியும் இஸ்ரேலிடம் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: காசாவில் இருக்கும் மக்களின் தற்போதைய மனநிலையை என்னால் உணர முடிகிறது. நான் அதைப் பார்க்கிறேன். அந்த சத்தங்களும் எனக்கு கேட்கிறது. மக்கள் எப்படி கஷ்டப்படுகிறார்கள் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள். உணவையும், மருந்துவப் பொருட்களையும் ஆயுதமாக்குவது மிகவும் தவறு.

அரசியல் தீர்வு மூலமே அமைதியை நிலைநாட்ட முடியும். இந்தப் போரினால் இஸ்ரேலும் பாதிக்கிறது. உங்களால் கருணை காட்ட முடியும் என்றால், அது உங்களுக்கும், பாலஸ்தீனியர்களுக்கும் மட்டுமல்லாது, ஒட்டு மொத்த மனிதகுலத்திற்கே நல்லது, எனக் கூறினார். (ஐ)





# ஹார்வர்டு பல்கலையில் வெளிநாட்டு மாணவர்களுக்கு தடை: டிரம்ப் உத்தரவு

வெளிநாட்டு மாணவர்களை ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதற்கு அதிபர் டொனால்டு டிரம்ப் நிர்வாகம் தடை விதித்து உள்ளது.

அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் மாகாணத்தில் ஹார்வர்டு பல்கலை உள்ளது. அமெரிக்க அதிபர் டிரம்பின் நிர்வாகம் இந்த பல்கலையில் உள்ள சமத்துவம் மற்றும் பன்முக திட்டங்களை நிறுத்தும்படியும், பேராசிரியர்களுக்கான அதிகாரத்தை குறைக்கவும் வழிகாட்டுதல்களை பிறப்பித்தது.

இதை ஏற்க மறுத்ததால், ஹார்வர்டு பல்கலைக்கு வழங்கப்பட்டு வந்த, 18,500 கோடி ரூபாய் நிதியுதவியை டிரம்ப் நிறுத்தினார். இது தொடர்பாக, டிரம்ப் நிர்வாகத்துக்கு எதிராக ஹார்வர்டு பல்கலைக்கழகம் வழக்கு தொடர்ந்து இருந்தது. இதனால் கோபம் அடைந்த டிரம்ப், ஹார்வர்டு பல்கலைக்கு வழங்கப்பட்ட வரி விலக்கு சலுகையை ரத்து செய்தார்.

தற்போது, வெளிநாட்டு மாணவர்களை பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதற்கு அதிபர் டொனால்டு டிரம்ப் நிர்வாகம் தடை விதித்து உள்ளது. இது குறித்து உள்நாட்டு பாதுகாப்பு செயலாளர் கிறிஸ்டி கூறியதாவது: வன்முறை, யூத எதிர்ப்பு ஆகியவற்றை வளர்க்க துணை போவதால் ஹார்வர்டு பல்கலை மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்து, அவர்களின் கல்விக் கட்டணத்திலிருந்து பயனடைவது பல்கலைக்கழகங்களுக்கு ஒரு சலுகை, உரிமை அல்ல. சரியானதைச் செய்ய ஹார்வர்டுக்கு ஏராளமான வாய்ப்புகள் இருந்தன. அது மறுத்துவிட்டது. சட்டத்தை கடைப்பிடிக்கத் தவறியதன் விளைவாக வெளிநாட்டு மாணவர்களை பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதற்கு தடை விதிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் இது ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

## ஆஸ்திரேலியாவில் வரலாறு காணாத வெள்ளம்



ஆஸ்திரேலியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கனமழையால் நியூஸ் சவுத் வேல்ஸ் நகரத்தில், 90 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் முக்கிய சுற்றுலா நகரமான சிட்னிக்கு வடக்கே அமைந்துள்ளது, நியூஸ் சவுத் வேல்ஸ் நகரம். இங்கு கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதில் டாரி, கெம்ப்சி, போர்ட் மெக்குவாரி, காப்ஸ் ஹார்பர் மற்றும் பெல்லிங்கன் உள்ளிட்ட பகுதிகளை வெள்ளம் சூழ்ந்தது. டாரி நகரில் மட்டும் ஒரு மாதத்திற்கு பெய்யவேண்டிய மழை ஒரே நாளில் பெய்தது.

தொடர் கனமழையால், நியூஸ் சவுத் வேல்ஸில் ஏராளமான நீர்நிலைகள் நிரம்பி, வெள்ளம் குடியிருப்புகளை நோக்கி பாய்ந்தது. நூற்றுக்கணக்கான வீடுகளும், சாலைகளும் நீரில் மூழ்கின. 500க்கும் மேற்பட்டோர் வெள்ளத்தில் சிக்கினர். வீடுகளின் மேல்பகுதியிலும், பாலங்களிலும் அவர்கள் தஞ்சம் அடைந்தனர். ஹெலிகாப்டர்களை பயன்படுத்தி அவர்களை மீட்புப்படையினர் பத்திரமாக மீட்டனர்.

வெள்ளத்தில் மூழ்கி இருவர் உயிரிழந்த நிலையில், சாலையில் பயணித்த இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. கடந்த, 90 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## வங்கதேசத்தில் மீண்டும் கவிழும் அரசு பதவியை ராஜினாமா செய்ய யூனுஸ் முடிவு

ராணுவ தளபதியுடன் மோதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், வங்கதேசத்தின் இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் ராஜினாமா செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வங்கதேசத்தில் ஏற்பட்ட மாணவர் போராட்டத்தால் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, தனது பதவியை ராஜினாமா செய்ததை தொடர்ந்து, முகமது யூனுஸ் தலைமையில், வங்கதேசத்தில் இடைக்கால அரசு அமைந்தது. இந்த அரசுக்கு ஆரம்பத்தில் வங்கதேச ராணுவ தளபதி வாக்கர் உஸ் ஜாமன் ஆதரவு தெரிவித்து வந்தார்.

சமீபத்தில் ராணுவ தளபதியிடம் ஆலோசிக்காமல், தேசிய பாதுகாப்பு ஆலோசகரை யூனுஸ் நியமித்தார். இதனால், இரு தரப்புக்கும் இடையே உரசல் ஏற்பட்டது. இதையடுத்து, உடனடியாக பொதுத்தேர்தலை அறிவிக்க யூனுசுக்கு ராணுவ தளபதி ஜாமன் அழுத்தம் கொடுத்து வருகிறார். இது தொடர்பாக பிற தளபதிகளுடன் ஆலோசிக்க அவசரக் கூட்டத்தை கூட்டினார். பெரும்பாலான ராணுவ தளபதிகள் தேர்தல் நடத்த ஆதரவு தெரிவித்தனர். இது பிரதமர் யூனுஸ்க்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், மேயர் பதவி தொடர்பாக யூனுஸ் அரசுக்கு எதிராக வங்கதேச தேசியவாத கட்சி டாக்காவில் போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளது. மாணவர்கள் அமைப்பினரும் இன்று போராட்டத்தை தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளனர்.

இந்த நிலையில், அடுத்தடுத்த நெருக்கடிகள் காரணமாக வங்கதேச இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் தனது பதவியை ராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து மாணவர்கள் தலைமையிலான தேசிய குடிமக்கள் கட்சி தலைவர் நித் இஸ்லாம் கூறுகையில், 'யூனுஸ் சாரின் ராஜினாமா முடிவு பற்றிய செய்திகளை கேட்டேன். உடனே அவரை சந்தித்து இது பற்றி ஆலோசனை நடத்தினேன். அவரும் ராஜினாமா செய்வது பற்றி யோசித்து வருவதாகக் கூறினார்.

இதுபோன்ற சூழலில் பணியாற்றுவது கடினம் என்று நினைக்கிறார். ஒவ்வொருவரும் அவருடன் இணைந்து பணியாற்றுவார்கள் என்று நம்புகிறேன்,' எனக் கூறினார். (ஐ)

## ரி-56

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு, வெள்ளவத்தை - ஹவலொக் சிட்டி பகுதியில் உள்ள ஆடம்பர குடியிருப்புத் தொகுதியில் பொலிஸாரால்

கைப்பற்றப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி தொடர்பில் 40 மற்றும் 68 வயதுடைய இரண்டு பெண்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான விசாரணைகள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அம்பிட்டிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முயன்றதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தேரர் அந்தப் பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்து குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டார் என்று தெரிவிக்கப்படும் காணொளி ஒன்றும் சமூக வலைத்தளத்தில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பல்வேறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விரிவான மீளாய்வுக்காக காத்திருக்கும், வெளிநாட்டு உதவிகளுக்கு அண்மையில் மூன்று மாதங்களாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பது குறித்து பிரதமரிடம் பிரதிநிதிகள் குழு விளக்கியது.

முக்கிய அபிவிருத்தித் திட்டங்களில், குறிப்பாக பெண்களுக்கான பாதுகாப்பான வீட்டுவசதித் திட்டத்தில் ஏற்படும் தாக்கம் மற்றும் ஆதரவு பொறிமுறை சீர்குலைவதால் ஏற்படக்கூடிய பரந்த மனிதாபிமான பிரச்சினைகளுக்கான சாத்தியமான தீர்வுகள் குறித்து இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது.

அபிவிருத்தியில் உலகளாவிய அளவில் அமெரிக்காவின் முக்கிய பங்கு மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பைத் தொடர்வதன் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையின் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்குத் தொடர்ந்து ஆதரவை வழங்குவதற்கான மாற்று வழிகளை அடையாளம் காண அமெரிக்கா மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்து பிரதமர் சிறப்பு கவனம் செலுத்தினார்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதிலும், நாட்டின் நீண்டகால அபிவிருத்தித் திட்டத்தை ஆதரிப்பதிலும் அமெரிக்கா விதித்துள்ள வரிகளின் தாக்கம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் யு.எஸ்.ஏ.ஐ.டி. இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான செயற்றிட்டப் பணிப்பாளரும் திட்ட அலுவலகப் பணிப்பாளருமான மௌரீன் ஹ்சியா, பாதிக்கப்படக்கூடிய மக்கள் பிரிவு தொடர்பான அலுவலகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் ஏஞ்சலினா ஹெர்மன், பொருளாதார அபிவிருத்தி அலுவலகத்தின் திட்ட முகாமைத்துவ நிபுணர் நிர்மி விதாரண, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த மற்றும் வெளியுறவு அமைச்சின் வட அமெரிக்கப் பிரிவின் பணிப்பாளர் பிரமுதித முனசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நாட்டை வந்தடையவுள்ள உப்பு கப்பல்!

*இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உப்பு தொகையின் முதல் தொகுதி இன்றிரவு நாட்டை வந்தடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.*

*இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உப்பு கப்பல் நேற்று (21) இரவு நாட்டிற்கு வரவிருந்த நிலையில், சீரற்ற வானிலை காரணமாக சில நாட்களுக்கு தாமதமாகலாம் என்று தேசிய உப்பு நிறுவனம் தெரிவித்திருந்தது.*

*எனினும் இன்றையதினம் 3,050 மெட்ரிக் டன் உப்பு அடங்கிய உப்பு தொகுதி இலங்கையை வந்தடையும் என்று தேசிய உப்பு நிறுவனத்தின் தலைவர் கயான் வெல்லால தெரிவித்துள்ளார்.*

*இறக்குமதி செய்யப்படுகின்ற உப்பு, சந்தையில் தற்போது ஏற்பட்டுள்ள உப்பு பற்றாக்குறைக்கு தீர்வாக அமையுமெனவும், அத்துடன் எதிர்வரும் ஒருவார கால பகுதிக்குள் உப்பின் விலையை 50 சதவீதத்தால் குறைக்க முடியும் என்றும் தேசிய உப்பு நிறுவனத்தின் தலைவர் கயான் வெல்லால நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.*

# பதுளை மாவட்ட எம்.பி சமிந்த விஜேசிறி ராஜினாமா!

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, தான் வகித்த பண்டாரவளை தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து விலகுவதற்கு முடிவு செய்துள்ளார்.

தனது ராஜினாமா கடிதத்தை இன்று (23) காலை, கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவிடம் நாடாளுமன்றத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து கையளித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்த சமிந்த விஜயசிறி, 2023ஆம் ஆண்டு தமது எம். பி பதவியையும் இராஜினாமா செய்திருந்ததுடன், மீண்டும் 2024ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கடுமையான மின்னல் தாக்கம் குறித்து எச்சரிக்கை



*ஊவா மாகாணம், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இன்று கடுமையான மின்னல் தாக்கம் ஏற்படுவதற்கான எச்சரிக்கையை வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.*

*இன்று இரவு 11.00 மணி வரை அமலில் உள்ள இந்த எச்சரிக்கையின்படி, 21 மாவட்டங்களுக்கு மின்னல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*மேலும் 04 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*மின்னல் தாக்கத்தால் ஏற்படும் சேதங்களைக் குறைக்க பொதுமக்கள் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

# கொழும்பில் என்.பி.பி. ஆட்சியமைக்க பிரபா கணேசனின் கட்சி நேசக்கரம்!

கொழும்பு, மே 23

பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயகத் தேசிய கூட்டணி தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாகச் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமானதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் அதன் தலைவர் பிரபா கணேசன் தலைமையில் பம்பலப்பிட்டி தலைமைக் காரியாலயத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இதன்போது கொழும்பு மாநகர சபையில் ஜனாதிபதி தலைமையிலான தேசிய



மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாக ஏகமானதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஜனநாயகத் தேசியக் கூட்டணிக்கு கொழும்பு மாநகர சபை உட்பட கிடைக்கப் பெற்ற பத்து ஆசனங்கள் மக்களின் அபிவிருத்திக்காகவே பயன்படுத்தப்படும் என்றும், அரசு மக்கள் விரோதச் செயற்பாடுகளை முன்னெடுத்ததால் ஆதரவை வாபஸ் வாங்கத் தயங்க மாட்டோம் என்றும் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் தலைவர் பிரபா கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

# இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர்!

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் எதிர்வரும் ஜூன்24ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியின் போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் குறிப்பிட்ட விடயமாவது,

போர் முடிவடைந்த பிறகு புதிய அத்தியாயத்தை நோக்கி பயணிப்பதற்குரிய யோசனையை நாம் முன்வைத்தோம். வடக்கு, கிழக்கை கட்டியெழுப்புவதற்குரிய செயலணி யோசனையும் முன்வைக்கப்பட்டது. ஆனால் அவை அமுலுக்கு வரவில்லை.

அரசியல் ரீதியில் தற்போது வங்குரோத்தடைந்துள்ள தரப்பினரே தமக்கு புத்துயிர் அளிப்பதற்கு போரை பயன்படுத்த முற்படுகின்றனர்.

தற்போது சமாதானமே முக்கியம். அதனை செய்வதற்கு நாம் முன்வரவேண்டும். அந்த இலக்கை நோக்கியே நாம் பயணித்துக்கொண்டுள்ளோம்.

தேசிய பொறிமுறை ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என நாம் உறுதியளித்துள்ளோம். அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே, இனவாதம் பேசினால் அது நல்லிணக்க முயற்சிக்கு தடையாக அமையும்.

மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்வரும் ஜூன் 24 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதர உள்ளார்.

இங்கு அவர், பிரதேசங்கள் மற்றும் நிறுவனங்களை கண்காணிப்பார். அதன் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

அந்த சவாலுக்கும் நாம் முகங்கொடுக்க வேண்டும். ஐ. நா. மனித உரிமைகள் பேரவை தலையிட்டாலும் - தலையிடா விட்டாலும்கூட தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொறுப்பு எமக்கு உள்ளது என்று தெரிவித்திருந்தார்.

# புதுக்குடியிருப்பில் இளம் குடும்பஸ்தர் மர்மமான முறையில் நேற்று உயிரிழப்பு

புதுக்குடியிருப்பு, மே 23

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் இளம் குடும்பஸ்தரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டவர் புதுக்குடியிருப்பு, 10 ஆவது தொகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் ஆவார்.

நபர் ஒருவர் புதரில் கிடப்பதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் குறித்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

பின்னர் மேற்படி நபர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் உயிரிழந்துள்ளார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

மரணத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் சடலம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.05.2025 வெளியிடப்பெற்றது.